# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,894 — 1931 ம் ஹு கார்த்திகைமீ 20 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### காணி விற்பனவு.

**Jaffna No. 37.**—1932 ம் ஆண்டு தைமீ 19 ந் திகதி செவ்வாய்க்கிழமை 9 மணி யளவில், புங்குடுதீவுக் கிராமக் கோட்டில், வட மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித் துண்டுகள், அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

48 காணித் துண்டுகள், வட மாகாணத்து தீவுப் பகுதியிலிருக்கின்றன.

பிளான் இலக்கம் 7,136. குறிச்சி—புங்குடுதீவு மேற்கு. கேள்விக்காரன்—என். வயிரமுத்து.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | உரித்தாளின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | காண்டைபுலம் மேற்கு .. | — .. | தரிசு நிலம் .. | 1 | 3 | 26 |
| 2 | ஷை .. | — .. | தரிசு நிலம் (ரோட்டுக்காக சேமிக்கப்பட வேண்டியது) | 0 | 1 | 9* |
| | | கேள்விக்காரன்—வி. யே. சின்னையா. | | | | |
| 3 | நந்திக்குண்டுக்கு தெற்கு வெளி | — .. | தரிசு நிலம் .. | 1 | 3 | 12 |
| 4 | ஷை .. | — .. | தரிசு நிலம் .. | 2 | 3 | 0 |
| | | கேள்விககாரன்—வி. கந்தையா. | | | | |
| 5 | ஷை .. | — .. | தரிசு நிலம் .. | 2 | 3 | 5 |

பிளான் இலக்கம் 7,767. குறிச்சி—புங்குடுதீவு கிழக்கு. கேள்விக்காரன்—கே. முத்துக்குமாரு.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | உரித்தாளின் பெயர். | விவரம். | ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | நம்பியகொண்டை .. | — .. | தரிசு நிலம் .. | 0 | 2 | 35 |
| | | கேள்விக்காரன்—இல்லை. | | | | |
| 2 | ஷை .. | — .. | தரிசு நிலம் (ரோட்டுக்காக சேமிக்கப்பட வேண்டியது) | 0 | 1 | 9* |
| 3 | ஷை .. | வைத்திலிங்கம் பெண் அன்னப்பின் ளையாற் கூட்டப்பட்ட நிலம் | நெல்வயல் .. | 0 | 1 | 13† |
| 4 | ஷை .. | — .. | நெல்வயல் (ரோட்டுக்காக (சேமிக்கப்பட வேண்டியது) | 0 | 0 | 14* |

பிளான் இலக்கம் 7,785. குறிச்சி—புங்குடு தீவு மேற்கு. கேள்விக்காரன்—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | உரித்தாளின் பெயர். | விவரம். | ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கொண்டதறைக்கு கிழக்கு .. | வி. காத்திகேசு பெண் நாகமுத்துவும், கே. வயித்திலிங்கம் பெண் அம்மணிப்பிள்ளையும் | தரிசு நிலம் .. | 3 | 0 | 5 |
| 2 | ஷை .. | மகாநாதர் வயிரமுத்து .. | தரிசு நிலம் .. | 1 | 2 | 8 |
| 3 | ஷை .. | — .. | தரிசு நிலம் (ரோட்டுக்காக சேமிககப்படவேண்டியது) | 0 | 1 | 1* |
| 4 | ஷை .. | மகாநாதர் வயிரமுத்து .. | தரிசு நிலம் .. | 4 | 1 | 17 |
| 5 | ஷை .. | வி. அமரசிங்கமும், அம்பலவாணர் பெண் நல்லமுத்துவும் | தரிசு நிலம் .. | 1 | 0 | 24 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | உரித்தாளியின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 6 | கொண்டைதறைக்கு கிழக்கு .. | — .. | தரிசுநிலம் (ரூட்டுக்காகச் சேமிக்கப்பட விடவேண்டியது) | 1 | 3 | 4* |
| 7 | ஷை .. | மகாநாதர் தாமோதிரம்பிள்ளையும் கணபதிப்பிள்ளை பெண் வள்ளியம்மையும் | தரிசு நிலம் .. | 5 | 0 | 13 |
| 8 | நீலக்கிளவன்பிட்டியில்அருகு .. | பூதத்தம்பி பெண் பொன்னம்மாவும், மறுஆளும் | தரிசு நிலம் .. | 0 | 2 | 39 |
| 9 | வாணன்புலம் அல்லது வாணன் புலத்திலருகு | விசுவநாதர் வயிரமுத்துவும் இன்னொருவரும் | தரிசு நிலம் .. | 2 | 1 | 36 |
| 10 | சங்கத்தகேணிக்கு வட மேற்கு | வயித்திலிங்கம் பசுபதிப்பிள்ளை .. | தரிசு நிலம் .. | 0 | 2 | 38 |
| 11 | கொண்டைதறைக்கு கிழக்கு வெளி | கணபதிப்பிள்ளை சதாசிவம் .. | தரிசு நிலம் .. | 12 | 0 | 25 |
| 12 | நந்திகுண்டு .. .. | ஏ. முத்துவேலும் மறுபேரும் .. | தரிசு நிலம் .. | 1 | 0 | 28 |
| 13 | ஷை .. | ஷை .. | தரிசு நிலம் .. | 0 | 2 | 36 |
| 14 | ஷை .. | சதாசிவம் பொன்னம்பலமும் மறுபேரும் | தரிசு நிலம் .. | 1 | 2 | 16 |
| 15 | சங்கத்தகேணி .. | மூத்ததம்பி தம்பையாவும் மறுபேரும் | தரிசு நிலம் .. | 2 | 0 | 15 |
| 16 | ஷை .. | ஷை .. | தரிசு நிலம் .. | 0 | 1 | 26 |
| 17 | ஷை .. | ஷை .. | நெல்வயல் .. | 3 | 0 | 4 |
| 18 | ஷை .. | வயித்திலிங்கம் பசுபதிப்பிள்ளை .. | நெல்வயல் .. | 3 | 1 | 14 |
| 19 | சங்கத்தகேணிக்கு வட மேற்கு | ஷை .. | தரிசுநிலம் .. | 0 | 3 | 24 |
| 20 | வெளியிற்புலம் .. | சின்னக்குட்டி இராமலிங்கமும் மறுபேரும் | தரிசு நிலம் .. | 2 | 0 | 24 |
| 21 | சோலகன் புலத்துக்கு கிழக்கு | எம். சோமசுந்தரமும் மறுபேரும் .. | தரிசு நிலம் .. | 2 | 3 | 34 |
| 22 | சோலகன்புலம் .. | சின்னக்குட்டி நாகமுத்துவும் மறுபேரும் | தரிசுநிலம் .. | 0 | 2 | 6 |
| 23 | சோலகன்புலத்துக்கு தெற்கு அல்லது கொல்லதீவுக்கு வடக்கு | மகாநாதர் தாமோதிரம்பிள்ளை .. | தரிசுநிலம் .. | 0 | 3 | 34 |
| 24 | கொல்லதீவுக்குக் கிழக்கு .. | — .. | தரிசுநிலம் .. | 7 | 0 | 38 |
| 25 | கட்க்கரைப்புலம் .. | — .. | தரிசுநிலம் (ரூட்டுக்காகச் சேமிக்கப்பட வேண்டியது) | 2 | 3 | 13* |
| 26 | சங்கத்தகேணி .. | சின்னக்குட்டி நாகமுத்து .. | தரிசுநிலம் .. | 1 | 0 | 31 |
| 27 | ஷை .. | மூத்ததம்பி சுப்பிரமணியமும் மறுபேரும் | தரிசுநிலம் .. | 2 | 2 | 35 |
| 28 | ஷை .. | ஷை .. | தரிசுநிலம் .. | 1 | 0 | 33 |
| 29 | நந்திக்குண்டு .. | — .. | தரிசுநிலம் (பாதைக்காகச் சேமிக்கப்பட வேண்டியது) | 1 | 0 | 17* |
| 30 | ஷை .. | — .. | தரிசுநிலம் .. | 4 | 0 | 9 |
| 31 | ஷை .. | — . | தரிசுநிலம் .. | 2 | 1 | 6 |
| 32 | கடக்கரைப்புலம் .. | முத்துக்குமாரு பெண் அன்னபூரணியும் மறுபேரும் | தரிசுநிலம் .. | 2 | 3 | 0 |
| 33 | புளியடி .. | அருணாசலம் சபாபதியும் மறுபேரும் | தரிசுநிலம் .. | 18 | 1 | 1 |
| 34 | கொல்லதீவுக்கு கிழக்கு .. | கதிரேசு இராமநாதனும்மறுபேரும் | தரிசுநிலம் .. | 2 | 1 | 10 |
| 35 | கொல்லதீவு .. | சின்னகுட்டி விசுவநாதனும் மறுபேரும் | தரிசுநிலம் .. | 1 | 0 | 11 |
| 36 | கரைககடைப்புலம் .. | சண்முகம் பெண் சிவகாமிப்பிள்ளையும் மறுபேரும் | கிணறுள்ள தரிசுநிலம் .. | 1 | 3 | 7 |
| 37 | ஷை .. | எம். சுப்பிரமணியமும் மறுபேரும் | தரிசுநிலம் .. | 2 | 0 | 38 |
| 38 | ஷை .. | முத்துக்குமாரு பெண் அன்னபூரணி | தரிசுநிலம் .. | 1 | 3 | 9 |
| 39 | ஷை .. | இராமலிங்கம் பெண் பேரிம்பம் .. | தரிசுநிலம் .. | 1 | 1 | 25 |

* விற்பனவுக்கல்ல.
† காணியை கூட்டிப்பிடித்தவருக்கே தீர்துவிடப்படும்.

இக்காணிகளின் மதிப்புவிலை விற்பனவன்று தெரிவிக்கப்படும்.

இக்காணிகளைப்பற்றிய மறு விபரங்கள் வட மாகாண ஏசண்டரிடமிருந்தும் படங்கள் அளவு கந்தோர்த் தலைவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்.
கொழும்பு: 1931 ஆண்டு கார்த்திகைமீ 17 ௳..

ஜே. வீ. பிறேன்,
காணிக் கொம்மிஷனர்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கறஸ்கமாவில் அரசாட்சிப்பாடசாலை கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 9,095. குறிச்சி—ஹறஸ்கம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வேலத்தென்னை அல்லது கிடன்கொட்டுவா (கிங்ஸ்ரீதீற்றில் 75 ம், 76 ம் வரி இலக்கப்பகுதிகள் | தோட்டம் | மாத்தளை ஜே. கொஸ்தா .. | 1 | 3 | 9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதிவவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ஞூ (ஜெனவரி) தை மாசம் 8 ௳ தேதியிலன்று காலை 10·30 மணிக்கு மாத்தளை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1931 ம் ஞூ (நவம்பர்) கார்திகைமீ 13 ௳ ௨.

சீ. ஏ. ஜோன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென் மாகாணத்தைச்சேர்ந்த மாத்துறைப் பிரிவிலிருக்கும் வெல்லபடபத்துவிலுள்ள அபரக்க என்னுமிடத்தில் கிராமக் கமிட்டி மார்க்கெற் ஒன்று கட்டுவதற்குக் காணி எடுத்துக்கொள்வது என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 14,363. குறிச்சி—பராவஹெர.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | குருந்துவத்த | 40 வயசுள்ள 7 தென்னமரங்களும், 6 துவங்கி 12 வயசு வரையுமுள்ள 5 தென்னமரங்களும், 3 வயசுள்ள 8 தென்னமரங்களும், 40 வயசுள்ள 2 பலாமரங்களுமுள்ள தோட்டம் | பராவஹெர வாசியாகியமீப்பெ கல்கெறதியகமகெ தொன் கொர்நேலிஸ் | 0 | 2 | 0 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கறபனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஞூ மார்கழி மாசம் 16 ௳ தேதியிலன்று காலமே 10 மணிக்கு மாத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1931 ம் ஞூ கார்த்திகைமீ 16 ௳ ௨.

பீ. எவ். பெரேரு,
மேலதிக உப அரசாட்சி ஏசண்டு.

---

## குத்தகை விற்பனவு.

அனுராசபுரத்து புல்லுவரிக் குத்தகை விற்பனவு.

1932 ம் ஆண்டின் புல்லுவரிக் குத்தகை கச்சேரியில் இம்மாதம் 28 ௳ திகதி சனிக்கிழமை காலமே 10 மணியளவில் பிரசித்த ஏலத்தில் போடப்படும்.

எச். எல். பெரெரு,
நகரசங்க அக்கிராசனருக்காக.

நகரசங்கக் கந்தோர்,
அனுராசபுரம், 1931 ம் ஞூ கார்த்திகைமீ 14 ௳ ௨.

---

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க மதுபானத் தீர்வைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்.

கள்ளுக்குத்தகை விற்பனவு.

கீழே கண்டிருக்கும் தவறணைகளில் 1932 ம் ஞூ தைமீ 1 ௳ திகதி தொடக்கம் 1932 ம் ஞூ ஆவணிமீ 31 ௳ திகதி வரைக்குமுள்ள காலத்திற்கு இலங்கை அரசாட்சியாருடைய 1931 ம் ஞூ பங்குனிமீ 20 ௳ திகதி 7,837 இலக்கத்தில் வெளிவந்த "கெசெற்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கள்ளுக்குத்தகை விற்பனவுக் கொந்தீசுகளுக்கும் 1929 ம் ஞூ சித்திரைமீ 12 ௳ திகதி 7,704 ம் இலக்கத்தில் வெளிவந்த "கெசெற்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் எல்லா மதுபான லைசென்சுகளைப்பற்றிய பொதுக் கட்டுப்பாடுகளுக்கும் அமைவாக கள்ளுவிற்கும் சதந்திரத்தை வடமாகாணம் கவுணமேந்து ஏசன்றுத்துரை யாழ்ப்பாணங் கச்சேரியில் 1931 ம் ஞூ மார்கழிமீ 4 ௳ திகதி வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்குப் பிரசித்த ஏலத்தில் விற்பார் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. உயர்ந்த கேள்விக்காரன் குத்தகைகாரனாக வெளியிட்டவுடன், குத்தகைப் பணத்தின் இரண்டு மாசக் குத்தகைக்குச் சரியான தொகையை உடனே ஏசன்றுத் துரையிடம் பிணையாகக் கட்டி தேவையான முத்திரை கொடுத்து விற்பனவு கொந்தீசுக்குக் கையொப்பம் வைக்க வேண்டும்.

3. எந்தக் கேள்வியையாவது ஒரு நியாயமுமின்றி ஏற்காது தள்ளிவிடுவதற்கு ஏசன்றுத் துரைக்குத் தத்துவமுண்டு.

4. விற்பனவுக் கொந்தீசைப்பற்றியும் வேறு விபரங்களைப்பற்றியும் யாழ்ப்பாணங் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

தவறணைகளின் விபரம்.

| இல. | இடம். | இல. | இடம். |
|---|---|---|---|
| 13 | .. கண்டாவளை | 14 | .. பரந்தன் |

ஏ. தீ. டைசன்,
வடமாகாணம் கவுணமேந்து ஏசன்றுத்துரை.

யாழ்ப்பாணம் கச்சேரி,
1931 ம் ஞூ கார்த்திகைமீ 17 ௳ ௨.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கிலுள்ள நெடுந்தீவு நடுக்குறிச்சி சொக்கநாதர் கார்த்திகேசுவாகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் அட்டவணையிலுள்ள B அச்சர விதானங்களில 6 ம் விதானத்திற் சொல்லிய பிரகாரம் அறிவிப்பது யாதெனில் நான் பதிவுகாரியஸ்த தலைவருக்கு நெடுந்தீவுப் பகுதியில் தமிழ்ப் பாஷையிற தொழில நடத்துவதற்காக நொத்தாரிசாக என்னைச் சேர்த்துக்கொள்ளும்படி விண்ணப்பஞ்செய்யக் கருத்துடையவனாக இருக்கிறேனென்பதை இத்தாலறிவிக்கிறேன்.

சொ. கார்த்திகேசு.

நெடுந்தீவு நடுக்குறிச்சி, யாழ்ப்பாணம்,
1931 ம் ஞூ ஐப்பசிமீ 30 ௳ ௨.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.